

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.7.2025) மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் சந்தித்து, மயிலாடுதுறையில் 16.7.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில், மீனவர்களின் நலனிற்காக தரங்கம்பாடி வட்டத்தில் இருக்கும் தாழம்பேட்டை மற்றும் வெள்ளக்கோயில் கிராமங்களில் கடற்கரையோர கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும், திருமுல்லை வாசல், மீனரங்கதரத்தில் மேல் கல்சுவர், நீட்டிப்பு மற்றும் தூர்வாருதல் பணி மேற்கொள்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும், பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும் போன்ற பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம். முருகன், மு. பன்னீர்செல்வம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களால் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் கும்பகோணத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலை, பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி., செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க.நசீர்முகமது, எஸ்.துரைமுருகன், ஜெ.நடராஜன், ஜெயலெட்சுமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில அயலக அணி துணைச் செயலாளர் இராம.விஜயன் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 24 ஆவது நினைவு நாளை முன்னிட்டு புத்தூரில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அருகில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன் மற்றும் குடமுருட்டி சேகர், வட்டச் செயலாளர் பவுல்ராஜ் உட்பட சிவாஜி கணேசனின் மன்ற நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு, ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்!

## நேற்று முன்தினம் (21 – 7 – 2025) தொடங்கியது!



### 1. கல்வி வளாகங்களில் சாதிய வன்முறை!

**திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கண்டனம்!**



மேற்கு வங்கம் காரக்பூர் ஐஐடியில் கடந்த ஏழு மாதங்களில் நான்கு மாணவர்கள் இறந்துள்ளதற்கு வருத்தம் தெரிவித்த திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் உயர் கல்வி வளாகங்களில் தொடர்ந்து சாதிய வன்முறையால் மாணவர்கள் இறப்பது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டுள்ளதாவது:

உயர் கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக மத்திய பல்கலைகழகங்களில் அமைக்கப்படும் சம வாய்ப்பு பிரிவுகள் பல்கலைக் கழக மானியக்குழுவின் விதிமுறைகள், 2012இன் படி அமைக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை விவரங்கள் என்ன? அவை இன்னும் முழுமையாக அமைக்கபடாததற்கான காரணங்கள் என்ன?

கல்லூரி/பல்கலைக்கழக வளாகங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் வன்முறை நிகழ்வுகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டும் மத்திய பல்கலைக்கழகங்களில் நடந்த இத்தகைய சம்பவங்களின் விவரங்கள், கல்லூரி வாரியாக/பல்கலைக்கழக வாரியாக வெளியிட வேண்டும். பாகுபாட்டை எதிர்கொண்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் அல்லது அரசு வழங்கிய ஆதரவு மற்றும் உதவிகளின் விவரங்கள் என்ன?

சாதி அடிப்படையிலான பாகுபாட்டால் எழும் குறைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் வகுத்துள்ள கூடுதல் வழிமுறைகள் என்ன?

### 2. பின்தங்கிய மாவட்டங்களில் மாதிரி கல்லூரிகள்

**டி. மலையரசன் கோரிக்கை!**



கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் 374 மாதிரி கல்லூரிகளை உருவாக்குவதாக ஒன்றிய அரசு முன்மொழிந்திருந்ததை சுட்டிக்காட்டி அதன் தற்போதைய நிலை என்ன என்று கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் டி. மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களை கண்டறியும் வரையறைகள் என்ன? இதுவரை தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ள அத்தகைய மாவட்டங்கள் எத்தனை? இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு? கல்லூரிகள் கட்டி முடிக்கப்பட தேவைப்படும் கால அவகாசம் என்ன? இக்கல்லூரிகளில் தரமான கல்வியை வழங்குவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? போன்ற பல்வேறு விவரங்களையும் அவர் கோரியுள்ளார்.

### 3. இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி! நாடாளுமன்றத்தில் கோரிக்கை!

**சி.என்.அண்ணாதுரை**

**ஜி.செல்வம்**





பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி மையங்கள் எத்தனை, அதில் அளிக்கப்படும் பயிற்சி விவரங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை மற்றும் ஜி.செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் மையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளாக இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள், பயிற்சி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள், வணிக சங்கங்கள் அல்லது தனியார் துறை முதலாளிகளுடன் இப்பயிற்சிக்காக அரசு செய்துள்ள ஒப்பந்தங்களின் விவரங்கள் என்ன?

மற்றும் தமிழ்நாட்டில் PMKVY பயனாளிகளுக்கு சிறந்த வேலை வாய்ப்பை உறுதி செய்வதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியுள்ளனர்.

### 4. தமிழ்நாட்டில் ஐடிஐகளின் செயல்பாடுகள்

**அ.மணி கேள்வி!**



தமிழ்நாட்டில் செயல்படும் தொழில் பயிற்சி மையங்களின் (ஐடிஐ) விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தருமபுரி மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

தர்மபுரி மாவட்டத்தில் செயல்படும் தொழில் பயிற்சி மையங்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள், அதில் வழங்கப்படும் படிப்புகள் மற்றும் சேர்க்கை விவரங்கள் என்ன? ஐடிஐகளில் கிடைக்கும் பயிற்சி மற்றும் உள்கட்டமைப்பின் தரத்தை அரசாங்கம் எவ்வாறு மதிப்பீடு செய்கிறது? புதிதாக தமிழ்நாட்டில் ஒன்றிய அரசாங்கம் நிறுவ முன்மொழிந்துள்ள ஐடிஐகளின் விவரங்கள் என்ன? பயிற்சி தரங்களை மேம்படுத்த, வேலைவாய்ப்பை உறுதி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 5. தங்க நகைக்கடன் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்க!

**தங்க தமிழ்செல்வன்**

**கணபதி ராஜ்குமார்**





தங்க நகைகள் மீது வங்கிகள் கடன் வழங்குவதற்கான விதிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்த இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) வரைவு வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்யக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு எழுதிய கடிதத்தை சுட்டிக்காட்டி திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

தங்கப் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் 2025 ஐ மறுபரிசீலனை செய்ய வேண்டும், 2 லட்சம் வரையிலான விவசாயம் மற்றும் விவசாயம் தொடர்பான கடன்களுக்கு தங்கத்தை பிணையமாக ஏற்றுக்கொள்வதை தொடர வேண்டும். மேலும் கடன் வழங்குவதற்கான விதிமுறைகளின் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துமாறும் RBI-க்கு அறிவுறுத்தச் சொல்லி ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் எழுதிய கடிதத்திற்கு ஒன்றிய அரசின் பதில் என்ன? என்று அவர்கள் கேட்டுள்ளனர்.

### 6. தமிழ்நாட்டில் புதிதாக கேலோ இந்தியா மையங்கள்!

**டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை!**



தமிழ்நாடு முழுவதும் மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் கேலோ இந்தியா மையங்களை (கேஐசி) திறக்க அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் குறித்து வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர், கடந்த ஐந்து ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டிலும் இந்த மையங்களில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல், செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன என்றும் மேலும் இத்திட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்த ஒன்றிய அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன என்றும் கேட்டுள்ளார்.

### 7. அகமதாபாத்தில் விமான விபத்துக்கான காரணங்கள் என்ன?

**டாக்டர் கனிமொழி சோமு கேள்வி!**



ஜூன் 12, 2025 அன்று அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளான துயர் மிகுந்த சம்பவத்திற்கான காரணங்கள் குறித்து மாநிலங்களவையில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டுள்ளதாவது :

இந்த விபத்தில் இறந்தவர்கள்/காயமடைந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

பயணிகள் தவிர மற்றவர்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு எவ்வளவு?

இதுவரை ஒன்றிய அரசு ஏதேனும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதா?

இந்த விபத்திற்கு காரணமாக யாரேனும் தனி நபர் அல்லது ஏதேனும் நிறுவனம் செய்த நாசவேலை வெளிச்சத்திற்கு வந்துள்ளதா?

இந்த விபத்துக்கு பொறுப்பானவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? மற்றும் எதிர்காலத்தில் இது போன்ற விபத்து நிகழாமல் இருக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?



நாமக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட, திருச்சி ரோடு பொன் விழா நகரில், ரூ. 49 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் துவக்க விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நாமக்கல் தெற்கு நகர தி.மு.க. செயலாளர் ராணா ஆனந்த், மேற்கு நகர செயலாளர் சிவகுமார், நாமக்கல் ஒன்றிய தி.மு.க. செயலாளர் பழனிவேல், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், வார்டு செயலாளர், பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

**மணிமாறன் தென்றல் தலைமை! சபரி கார்த்திகேயன் வரவேற்புரை! எம்.அமுதபாரதி - சியாமளா நவநீதகிருஷ்ணன் முன்னிலை!**

# கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாணவர்களுக்கு நலஉதவிகள்!

## கழக முன்னணியினர் வழங்கினர்!

பொள்ளாச்சி, ஜூலை 23-

கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் திமுக இளைஞரணியின் 46 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு பொள்ளாச்சி நேதாஜி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் பத்தாம் வகுப்பு மாணவிகளுக்கு வடிவியல் பெட்டி (Geometry Box) வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ். சபரிகார்த்திகேயன் வரவேற்புரையில் பொள்ளாச்சி தெற்கு நகர பொறுப்பாளர் எம்.அமுதபாரதி, பொள்ளாச்சி நகராட்சி தலைவர் சியாமளா நவநீத கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, மாவட்ட அவைத் தலைவர் மயூராசுப்பிரமணியம், மாவட்ட பொருளாளர் ஜெயபிரகாஷ், நகராட்சி துணைத்தலைவர் எஸ்.கவுதமன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார், நகர அவை தலைவர் அழகப்பன், நகர துணை செயலாளர் பார்த்திமா அக்பர், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மருதராஜ், வழக்கறிஞர் வி. பி.கிரி, மாவட்ட பிரதிநிதிகள் ஸ்வீட் நாகராஜ், இரும்பு சுப்பிரமணியம், நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ செந்தில்குமார், போர்வெல் துரை, உமாமகேஸ்வரி சிவக்குமார், கவிதா மணிகண்டன், விஜயா காயத்ரி சபாபதி, சண்முகபிரியா சதீஷ், கண்ணன் கலைவாணி, ஜெயபிரகாஷ் லோகநாயகி, கனகராஜ் கீதா, தினேஷ் சரிதா, வட்டச் செயலாளர்கள் விஜயகுமார், கே.பி.மணிகண்டன், நாகேந்திரன், பூவை செல்வராஜ், ஜெகதீஷ், பஷீர் பாய், சதீஷ்குமார், பாலசுப்பிரமணியம், ஆறுமுகம், தளபதி குமார், செந்தில் ராஜ், ஷேக் நிலாபர்னிஷா, சரவணன் தமிழன்பன்,

முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.வி.ஆறுமுகம், முன்னாள் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயகுமார், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சதீஷ், மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் அவினாஷ் கார்த்திக், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் வசுந்தரம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சைஜு, நகர பொறியாளர் அணி அமைப்பாளர் சரவணன், வழக்கறிஞர் சந்தோஷ், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சு.ஈஸ்வரன், பாலமுருகன், பாண்டிதுரை, அபூபக்கர் சித்திக், நகர ஆதி திராவிட நலக்குழு துணை அமைப்பாளர்கள் லோகநாதன், ஆலயம் நாகராஜ், பேங்க் விஜயன், எம்.பி.ஆனந்த் குமார், சதீஷ் ஜெகநாதன், முன்னாள் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஆட்டோ ராமு, ஆட்டோ பஞ்சலிங்கம், தொழிற்சங்கம் தாஸ் பிரபு, சபரிதுரை, பிரவீன் குமார், விக்னேஸ்வரன், ஹரி பிரகாஷ், ஹரி ராஜா, ஊத்துக்குளி அரவிந்த், சுதீஷ் ராஜ், ஓ.எம்.எஸ்.சக்தி, கலைஞர் செய்திகள் பத்திரிக்கையாளர் ரமேஷ், புகைப்படக் கலைஞர் போட்டோ பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் வருகை தந்த அனைவருக்கும் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் கோட்டாம்பட்டி நவீன் நன்றி கூறினார்.



கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் தி.மு.க. இளைஞரணியின் 46 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு பொள்ளாச்சி நேதாஜி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் பத்தாம் வகுப்பு மாணவிகளுக்கு வடிவியல் பெட்டி (Geometry Box) வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ். சபரிகார்த்திகேயன் வரவேற்புரையில் பொள்ளாச்சி தெற்கு நகர பொறுப்பாளர் எம்.அமுதபாரதி, பொள்ளாச்சி நகராட்சி தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக முன்னணியினர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.